(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW15 |
| Name | : | **Thiru.Arul Anandan** |
| Father's Name | : | Thiru.Deva Asirvatham |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th March 2026.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது கோட்டையூரில் வசித்து வருகிறேன். கடந்த 30.06.2013 அன்று ஊ.த.க பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் அடிப்படையில் பணிஓய்வு பெற்றேன். நான் சிவகங்கை மாவட்டம், ஊ.த.க பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது அந்தஅலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த ஊ.த.க.

பிரிவு குற்ற எண்.11/2011 வழக்கை மேல் விசாரணைக்காக அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.பாண்டியராஜன் அவர்கள் விசாரணை செய்து வைத்திருந்த வழக்கை அதிகாரிகளின் உத்தரவின்பேரில் வழக்கு கோப்பினை விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். இவ்வழக்கில் அவர் மாதிரி குற்ற வரைவு அறிக்கை தயார் செய்து ஊ.த.க பிரிவு தலைமையகத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்.

2. அதன்பின்னர் அவர் பதவி உயர்வில் சென்ற காரணத்தினால் தலைமையகத்திலிருந்து பெறப்பட்ட குற்ற நமூனா எண்.RC240/2011/EB/Sivagangai–ன் படி கடந்த 16.08.2012–ல் இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் எதிரி மீது குற்ற வழக்கு தொடர இசைவாணை வழங்கிய சிவகங்கை மின் வாரிய கண்காணிப்பு பொறியாளர் அவர்களை கடந்த 17.10.2012 அன்று அவர்களது அலுவலகத்தில் சந்தித்து இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்கள், ரசாயன பகுப்பாய்வு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்து வழக்கின் விபரத்தை அவருக்கு தெரியபடுத்தினேன். பின்னர் அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டேன்.

3. பின் இவ்வழக்கின் வாதி மற்றும் ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்தேன். அவர்கள் இவ்வழக்கில் கொடுத்த வாக்குமூலத்தை அப்படியே கூறிய காரணத்தினால் புதிதாக வாக்குமூலத்தை நான் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் எதிரி மீது ஊ.த.க பிரிவு சட்டம், 1988–ன் பிரிவுகள் 7 மற்றும் 13(1)(d) r/w 13(2)–ன் படி 19.11.2012 அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் **உதவி செயற்பொறியாளர்(விநியோகம்), தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்புவனம் அவர்கள் ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கடந்த 18.11.2011 அன்று சான்றளிக்கப்பட்ட ஆவணங்களை** கொடுத்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது. *(மேற்படி ஆவணங்களின் அசல் தாக்கல் செய்யப்படாமல் சான்றளிக்கப்பட்ட ஆவணம் தாக்கல் செய்ததால் எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.)*

4. என்னிடம் காண்பிக்கப்படும் **உதவி செயற்பொறியாளர்(விநியோகம்), தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்புவனம் அவர்கள் ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கடந்த 21.11.2011 அன்று சான்றளிக்கப்பட்ட ஆவணங்களை** கொடுத்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.33** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அலைபேசி எண். 9344341463 என்ற எண்ணுடைய CDR குறித்த விபரங்கள் சான்றளிக்கப்பட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். கடந்த 02.12.2011 ம் தேதி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு Reliance நிறுவனத்திடமிருந்து CDR விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. மேற்படி **CDR விபரங்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.34** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 14.11.2011 அன்று கண்காணிப்பு பொறியாளர் SEDC/Sivaganga அவர்கள் காவல் ஆய்வாளர், சிவகங்கை அவர்களுக்கு எதிரியின் பணி சம்பந்தமான விபரங்களை ஆய்வாளருக்கு அனுப்பியுள்ளார். மேற்படி **எதிரி பணி சம்பந்தமான விபரங்கள் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.35** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.11.2011 அன்று உதவி செயற்பொறியளார்(விநியோகம்), தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்புவனம் அவர்கள் காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு சிவகங்கை அவர்களுக்கு திரு.முருகசாமி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட விபரத்தினை கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். அந்த கடிதம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த **கடிதம் அ.த.சா.ஆ.36** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.11.2011–ம் தேதியிட்ட பகுப்பாய்வு அறிக்கையின் அசல் **அ.த.சா.ஆ.37** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர்களுக்கான ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீட்டு ஒழுங்கு முறை விதிகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த விதியினை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த விதியைப்பார்த்தால்தான் ஒரு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு உதவி பொறியாளரை பணிநியமிக்கும் மற்றும் பணி நீக்கம் செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது என்று தெரிய வரும் என்றால் சரியல்ல, ஊழல் தடுப்புச்சட்டத்தின்படி எதிரியை பணி நீக்கம் மற்றும் பணியமர்த்தும் அதிகாரம் மேற்படி கண்காணிப்பு பொறியாளர்களுக்கு உள்ளது என்பதால் அவர்களிடம் இசைவாணை பெறப்பட்டது. அப்படி ஊழல் தடுப்பு சட்டத்தில் எந்த பிரிவில் கண்காணிப்பு பொறியாளர் அவர்களுக்கு இசைவாணை வழங்க எந்த பிரிவின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் பல ஆண்டுகள் ஆனதால் சரியாக ஞாபகமில்லை.

2. அப்படி ஒரு சட்டப்பிரிவே ஊழல் தடுப்பு பிரிவு சட்டத்தில் இல்லை என்றால் சரியல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு உதவி பொறியாளரை யார் பணியமர்த்தும் மற்றும் பணி நீக்கம் செய்யும் அதிகாரம் உண்டு என்பதை மேற்படி தமிழ்நாடு மின்சார வாரிய

பணியாளர்களுக்கான ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீட்டு ஒழுங்கு முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அந்த விதிகளை கடைபிடித்துதான் யார் அந்தஎதிரியை பணிநீக்கம் செய்யும் அதிகாரம் உள்ளது என்பது தெரிய வரும் என்றால் சரியல்ல.

3. எதிரியின் பணி சம்பந்தமாக ஏதாவது வழிகாட்டுதல், அரசாணை, சுற்றறிக்கை ஏதாவது கைப்பற்றினேனா என்றால் அவரது பணி குறித்த விபரங்களை ஆய்வாளர் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்படி எந்தவொரு வழிகாட்டுதல், அரசாணை, சுற்றறிக்கையோ ஆய்வாளர் கைப்பற்றவில்லை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.37 பகுப்பாய்வு அறிக்கை, திருப்புவனம், உதவி செயற்பொறியாளர் அனுப்பிய அறிக்கையான அ.த.சா.ஆ.32 மற்றும் 33, எதிரி அலைபேசியின் CDR விபரங்களான அ.த.சா.ஆ–34, எதிரியின் பணி விபரங்கள் சம்பந்தமான கோப்பு அ.த.சா.ஆ–35, உதவி செயற்பொறியாளர் ஆய்வாளருக்கு அனுப்பி கடிதம் அ.த.சா.ஆ–36 ஆகிய ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் மேல் புலன் விசாரணை பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பே புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.பாண்டியராஜன் அவர்கள் மாதிரி குற்றப்பத்திரிக்கையை

இயக்குநர், ஊ.த.கபிரிவு அவர்களுக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அப்படி அந்த மாதிரி குற்றப்பத்திரிக்கையை அனுப்புவதற்கு முன்பாக பகுப்பாய்வு அறிக்கையோ அல்லது இசைவாணையோ கைப்பற்றி மாதிரி குற்றப்பத்திரிக்கையுடன் அனுப்பியதாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் திரு.பாண்டியராஜன் அவர்கள் இசைவாணை கொடுத்த அதிகாரிக்கு இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் அனுப்பவில்லை என்றால் சரிதான், தலைமை இடத்திற்குதான் அனுப்ப வேண்டும். தலைமை இடத்திலிருந்து நான் இந்த வழக்கில் மேல் புலன் விசாரணைக்கான பொறுப்பேற்றபதற்கு முன்பு ஏதாவது ஆவணங்கள் தலைமை இடத்திலிருந்து இசைவாணை வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்பட்டதா என்றால் ஆமாம், அனுப்பப்பட்டது. எந்த தேதியில், என்னென்ன ஆவணங்கள், என்ன Reference–ல் அனுப்பப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. நான் முதன்முதலாக இசைவாணை கொடுத்த அதிகாரியை சந்தித்து விசாரணை செய்வதற்கு முன்பாக இந்த வழக்கு கோப்பு குறித்த ஆவணங்கள் அவருக்கு அனுப்பப்பட்டு அவரது பரிசீலனையில் இருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அப்படி ஆவணங்களை இயக்குநர் அலுவலகத்திலிருந்து இசைவாணை

வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருந்தால் முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்கள், பகுப்பாய்வு அறிக்கையின் சான்றிட்ட நகல் மற்ற அனைத்து ஆவணங்களை நான் இசைவாணை வழங்கிய அதிகாரிக்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் மேற்படி ஆவணங்களை நான் இசைவாணை வழங்கிய அதிகாரிக்கு கொடுக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ம முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்கள், பகுப்பாய்வு அறிக்கையின் சான்றிட்ட நகல் மற்ற அனைத்து ஆவணங்களை அனுப்பும்படி இசைவாணை வழங்கிய அதிகாரி கடிதம் எதுவும் எனக்கு கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. கடந்த 17.10.2012 அன்று இசைவாணை வழங்கிய அதிகாரியினை நான் சந்திக்கவும் இல்லை என்றும், எந்த ஆவணங்களையும் அவரிடம் காண்பிக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கின் எதிரி மீது இசைவாணை வழங்குவதற்கு அ.சா.1 திருமதி.நல்லம்மாள் அவர்களுக்கு தமிழ்நாடு பணியாளர்கள் ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீட்டு ஒழுங்கு முறை விதிகளின்படி அதிகாரம் கிடையாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர் முருகசாமி மற்றும் காவல் ஆய்வாளர் திரு.பாண்டிராஜன் அவர்களை தவிர

வேறு யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, அ.சா.1–ஐ விசாரித்துள்ளேன். மற்ற சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை. அ.சா.2 முருகசாமியை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து விசாரித்தேன், தேதி ஞாபகமில்லை. நான் சொல்வதுபோல் அ.சா.2 முருகசாமியை விசாரிக்கவும் இல்லை, அவர் என்னிடம் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்பதால்தான் நான் அ.சா.2 டம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. வழக்கில் கண்ட புகாரை நான் பார்த்து பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை. அந்த புகாரில் K.K.செந்தில்குமார் என்பவர் சாட்சி கையொப்பம் செய்திருப்பதை தெரிந்தும் அந்த புகாரின் நகலை நான் பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. K.K.செந்தில்குமார் என்ற நபர் இருக்கிறாரா என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றிய விபரம் தெரியாது. K.K.செந்தில்குமார் என்ற நபரை நானும் விசாரிக்கவில்லை, எனக்கு முன்னால் புலன் விசாரணை செய்த அதிகாரியும் விசாரிக்கவில்லை என்றால் நான் விசாரிக்கவில்லை, காவல் ஆய்வாளர் திரு.பாண்டியராஜன் விசாரணை செய்தாரா என்பது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. K.K.செந்தில்குமார் என்பவரையும்

இறுதி குற்றப்பத்திரிக்கையில் சாட்சியாக காண்பிக்கபடவில்லை என்றால் சரிதான். இந்த புகார்தாரர் முருகசாமியை விசாரணை செய்யும் போது அவருக்கு எத்தனை மேனேஜர்கள் இருந்தார்கள் என்றும் அவர்களது பெயர், விலாசம் குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஏற்கனவே சொன்ன வாக்குமூலத்தைதான் சொன்னார், அதனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை, அதிலும் அவரது மேனேஜர் குறித்து எந்த விபரமும் சொல்லப்படவில்லை.

7. 18.10.2011 மற்றும் 08.11.2011 ஆகிய இரண்டு தேதிகளிலும் அ.சா.2 முருகசாமி இந்த எதிரியை அவர் அலுவலகத்தில் சந்தித்தபோதும், எதிரி ரூ.10000/– அவரிடம் லஞ்சம் கேட்டதாக சொல்லும்போதும், அவருடன் அவருடைய மேனேஜரும் அவருடன் இருந்தார் என்பது தெரியவந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.9 திரு.பிரபாகரன் என்பவர் இந்த புகார்தாரர் முருகசாமியின் மேனேஜராக இருந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. திரு.பிரபாகரன் என்பவர் எந்த காலத்திலும் மேனேஜராக பணிபுரிந்தது கிடையாது என்றாலும் அந்த இந்த வழக்கிற்காக சாட்சி வேண்டும் என்பதற்காக பின்யோசனையின்படி சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

8. K.K.செந்தில்குமார் என்ற ஒரு நபர் கிடையாது என்றாலும் அந்த புகாரின் சாட்சியாக K.K.செந்தில்குமார் என்பவர் கையொப்பம் செய்ததாக சொல்வதும் ஆள்மாராட்டத்தின்பேரில் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இந்த எதிரி புகார்தாரர் முருகசாமியிடம் ரூ.10000/– கேட்டதும் இல்லை, எதிரி அவரிடம் ரூ.10000/– லஞ்சப்பணம் பெறவும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எந்த சாட்சியையும் விசாரிக்காமல் சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் இந்த எதிரி மீது இறுதி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த எதிரி நான் பார்த்த ஆவணங்களின் அடிப்படையில் குற்றமற்றவர் என்று தெரிந்திருந்தும் அவர் மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.03.18 17:08:39 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.